

வேலூர் மாவட்டம் காட்பாடி சித்தூர் பேருந்து நிலையத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவேந்தல் பொதுக்கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி சிறப்புரைஆற்றினார். அருகில் மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி. எம். கதிர் ஆனந்த், மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி, சி.நரசிம்மன், பகுதி செயலாளர் வன்னியராஜா, மாநகராட்சி துணை மேயர்தெற்கு பகுதி செயலாளர் எம்.சுனில்குமார், பொதுக்குழு உறுப்பினர் தயாநிதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தி.மு.கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினின்

# பாதுகாப்பைக் குறைப்பது அரசியல் காழ்ப்புணர்வே!

## மனித நேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா கண்டனம்!

சென்னை, செப். 1-

“தி.மு.கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பாதுகாப்பைக் குறைத்திருப்பது அரசியல் காழ்ப்புணர்ச்சியாகும்” என்று மனித நேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா கூறியுள்ளார்.



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முன்னாள் முதலமைச்சரும்திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த காவல்துறை பாதுகாப்பு பெருமளவில் குறைக்கப் பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

ஒரு முன்னாள் முதலமைச்சர், முக்கிய அரசியல் கட்சியின் தலைவர் மற்றும் தமிழ்நாட்டின் முக்கிய மான அரசியல் தலைவர்களில் ஒருவரான மு.க. ஸ்டாலின் அவர்களின் பாதுகாப்பை குறைப்பது என்பது சாதாரண நிர்வாக நடவடிக்கையாக மட்டும் பார்க்கப்பட முடியாது.

பாதுகாப்பு என்பது அரசியல் விருப்பு- வெறுப்புகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படக் கூடாது. ஒருவரின் அரசியல் நிலைப்பாடு அல்லது அவர் வகிக்கும் அரசியல் பாத்திரத்தின் அடிப்படையில் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றம் செய்வது ஜனநாயக மரபுகளுக்கு உகந்ததல்ல.

பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்த முறையான மதிப்பீட்டின் அடிப்படையில் தான் பாதுகாப்பு ஏற்பாடுகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். அவ்வாறு அறிவியல் ரீதியான அச்சுறுத்தல் மதிப்பீடு எதுவும் இல்லாமல் பாதுகாப்பு குறைக்கப்பட்டிருந்தால், அது மிகுந்த கவலைக்குரிய விஷயமாகும்.

குறிப்பாக, தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரின் பாதுகாப்பு தொடர்பான முடிவில் அரசியல் தலையீட்டுக்கு எந்தவித இடமும் இருக்கக்கூடாது.

மு.க.ஸ்டாலின் அவர்களின் பாதுகாப்பு தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள முடிவுக்கான காரணங்களை தமிழ்நாடு அரசு வெளிப்படையாக மக்களுக்கு விளக்க வேண்டும். பாதுகாப்பு குறைப்பு அச்சுறுத்தல் மதிப்பீட்டின் அடிப்படையில்தான் மேற்கொள்ளப்பட்டதா? அதற்கான உளவுத்துறை மதிப்பீடு என்ன? பாதுகாப்பு குறைப்பு தொடர்பாக எந்த அதிகாரிகள் பரிந்துரை செய்துள்ளனர்? என்பன உள்ளிட்ட கேள்விகளுக்கு அரசு தெளிவான பதிலை அளிக்க வேண்டும்.

அரசியல் எதிரிகளை எதிர்கொள்வது என்பது ஜனநாயகத்தில் அரசியல் விவாதத்தின் மூலமாக இருக்க வேண்டும்; அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களின் பாதுகாப்பை பாதிக்கும் வகையில் நடவடிக்கை எடுப்பதாக இருக்கக்கூடாது.

எனவே, மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பை குறைத்திருப்பது தொடர்பான முடிவை தமிழ்நாடு அரசு உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். அவருக்குத் தேவையான முழுமையான பாதுகாப்பை உறுதி செய்வதுடன், இந்த விவகாரத்தில் எந்தவித அரசியல் உள்நோக்கமும் இல்லை என்பதை அரசு வெளிப்படையாகத் தெளிவுபடுத்த வேண்டும்.

ஒரு அரசியல் தலைவரின் பாதுகாப்பு என்பது அவரது தனிப்பட்ட பிரச்சினை மட்டுமல்ல; அது ஜனநாயகத்தின் பாதுகாப்பு மற்றும் அரசியல் சகிப்புத்தன்மையுடன் தொடர்புடைய பொதுப் பிரச்சினையாகும்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## சேலம் மாவட்டம் சர்க்கார் உடையாம்பட்டி பகுதியில்

# ரயில்வே சுரங்கப்பாதை அமைக்கும் இடத்தில் பொதுமக்கள் சென்று வர தனிப்பாதை அமைக்கப்படும்!

## இடத்தை ஆய்வு செய்த தே.மலையரசன் எம்.பி. உறுதி!

சேலம், செப். 1 -

சேலம் மாவட்டம் நரசிங்கபுரம்-பழனியாபுரி சாலையில் சர்க்கார் உடையாம்பட்டி பகுதியில் ரயில்வே சுரங்கப்பாதை அமைக்கும் பணி கடந்த ஒரு மாதமாக நடைபெற்று வருகிறது. இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் சென்று வர தனிப்பாதை வசதி இல்லாததால், பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு கட்ட போராட்டங்கள் நடத்தியும், மனுக்கள் மூலமும் அதிகாரிகளிடம் புகார் தெரிவித்து வந்தனர். இதையடுத்து, 20 நாட்களுக்கு முன்பு ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர், தாசில்தார் உள்ளிட்ட அதிகாரிகள் சம்பவ இடத் தில் ஆய்வு செய்து, பொது மக்களின் கோரிக்கைகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர்.



இந்நிலையில், நேற்று கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் ஆய்வு செய்தார்.

அப்போது பொதுமக்கள் கூறுகையில், இப்பகுதியில்சுமார்200குடும்பங்கள் பல ஆண்டுகளாக வசித்து வருகிறோம். சுரங்கப் பாதை அமைப்பதற்கு முன்பு ரயில்வே, வருவாய்த்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் இணைந்து ஆய்வு செய்து, பாலத்தின் இரு புறமும் தலா 15 அடி அகலத்தில் பாதை ஒதுக்கி, குடியிருப்புகள் மற்றும் விவசாய நிலங்களுக்கு பாதிப்பு ஏற் படாதவகையில் பணிகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்தனர்.

மேலும், சாலை செல்லும் கிழக்கு-மேற்கு திசையிலேயே சுரங்கப்பாதை அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்ட நிலையில், தற்போது தெற்கு-வடக்கு திசையில் பணிகள்கள் நடைபெறுகிறது. இருபுறமும் போதிய பாதை வசதி ஏற்படுத்தப்படவில்லை இதனால் குடியிருப்புகள் மற்றும் விவசாய நிலங்களுக்கு செல்ல முடியாத நிலை ஏற்படுவதுடன், விபத்து அபாயமும் உள்ளது. குடியிருப்புகள் மற்றும் விவசாய நிலங்களுக்குச் செல்லவும், கார், லாரி, பஸ் உள்ளிட்ட வாகனங்கள் சென்று வரும் வகையில் உரிய சாலை மற்றும் மாற்றுப்பாதை வசதி ஏற்படுத்த வேண்டும் என்றனர்.

இதையடுத்து, சுரங்கப் பாதை பணிகள் நடைபெறும் இடத்தை தே. மலையரசன் எம்.பி, நேரில் ஆய்வு செய்து, இது குறித்து அதிகாரிகளிடம் பேசி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். ஆய்வின் போது ஆத்தூர் ஒன்றிய செயலாளர் டாக்டர் வே. செழியன், நரசிங்கபுரம் நகர செயலாளர் என். பி. வேல்முருகன், நகர மன்ற தலைவர் அலெக்சாண்டர் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி, மணல்மேல்குடி ஒன்றிய பெருந்தலைவர் பரணி கார்த்திகேயன் தலைமையில் தாலிப் திருமண மஹாலில் நடைபெற்ற புதுகை எஸ்.டி.அஜித் குமார் இல்ல திருமண விழா நடைபெற்றது. இதில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், மழையூர் சரவணன், ஒன்றிய, பேரூர், இளைஞர் அணி அமைப்பாளர்கள் ப.ராசி பரூக், சி.கே.அகிலன், சீ.சிவகுரு, சேக் அப்துல்லா, அரவிந்த் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.





தொரப்பாடியில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களின் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழகம் திறந்த வெளி மாநில மாநாட்டில் கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திட்டக்குடி சட்ட மன்ற உறுப்பினர் சி.வி.கணேசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

## விழுப்புரம் வடக்கு மாவட்டம்

# செஞ்சி சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!

செஞ்சி, செப். 1 -

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் விடுத் துள்ள அறிக்கை வருமாறு:



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப. சேகர் தலைமையில்

இன்று ( 01.09.2026 செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணி அளவில் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள தமிழ் திருமகள் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

எனவே கூட்டத்திற்கு செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட, நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதி, நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. 22.8.2026அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின் படி ஒன்றிய, நகர ,பேரூர் கழகம் மறு சீரமைப்பு பணிகள் சம்பந்தமாக,

2.கழக ஆக்கப்பணிகள் சம்மந்தமாக

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. பங்கேற்பு! வேலூர் மாவட்டம் காட்பாடியில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவேந்தல் பொதுக்கூட்டம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

வேலூர், செப். 1 -

வேலூர் மாவட்டம் காட்பாடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களின் நினைவேந்தல் பொதுக்கூட்டம் சித்தூர் பேருந்து நிலையத்தில் நடந்தது.

கூட்டத்திற்கு வடக்கு பகுதி செயலாளர் வன்னியராஜா தலைமை தாங்கினார்.

வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் சிறப்புரை ஆற்றினார்.

வேலூர் மாநகராட்சி துணை மேயரும், தெற்கு பகுதி செயலாளர் எம். சுனில்குமார், காந்திநகர் பகுதி செயலாளர் என்.பரமசிவம் ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். ஒன்றிய செயலாளர்கள் எஸ்.சரவணன், கே. கருணாகரன், எஸ். தணிகாசலம், சி.ரவி, ஏ.கே.முருகன், பி.முருகபெருமாள், ஒன்றிய குழு தலைவர் வி. வேல்முருகன், மண்டல குழு தலைவர் புஷ்பலதா, மாநகர துணை செயலாளர். ஒய். தேவநேசன், வட்ட செயலாளர்கள் கே. அன்பு,பி. லோகநாதன், பி. விநாயகம், ஏ. எம். சம்பந்தம்,சி. கிரி,சி. அரிகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டீடா சரவணன், மாமன்ற உறுப்பினர்கள் ஜி. ரவிக்குமார், சித்ரா லோகநாதன், சித்ரா மகேந்திரன், கே. ஜி. சீனிவாசன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ். பாரதி சிறப்புரை ஆற்றினார். பிறகு அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

முதலமைச்சர் விஜய் அடுத்தபிரதமர்என தவெ.க.வினர்பேசி வருவது குறித்த கேள்விக்கு அவர் ஐ.நா. சபைக்கு கூட தலைவராக வரலாமென சொல்வார்கள். கற்பனைக்கு எல்லையே கிடையாது. அவர்கள் என்ன வேணா நினைக்கட்டும். அவர் பிரதமராக வர வேண்டும் என சொன்னாலே ராகுல்காந்தி பிரதமர் இல்லை என முடிவு பண்ணிட்டாங்க இல்லையா? எனக் கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் சி. நரசிம்மன், தெற்கு மாவட்ட அவைத்தலைவர் தி. அ. முகமது சகி,பொதுக்குழு உறுப்பினர் வீ. தயாநிதி, கழக புரவலர் துரை சிங்காரம், மாநில இலக்கிய அணி துணை செயலாளர்கள் சேர்க்காடு கென்னடி, பிரம்மபுரம் பழனி, தலைமை கழக பேச்சாளர்கள் சாந்தகுமார், குமரன், பொதுக்குழு உறுப்பினர் ஜி. லோகநாதன்,

மாவட்ட பொருளாளர் நா. அசோகன், ஒன்றிய செயலாளர்கள்கே. சீதாராமன், ஜெயா முருகேசன், வீ. பிரதீஷ், பொதுக்குழு உறுப்பினர் கே. தயாளமூர்த்தி, முன்னாள் ஒன்றிய குழு தலைவர் பிரமிளா தயாநிதி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் வாசுகி கோட்டீஸ்வரன், கோரந்தாங்கல் குமார், ஜே. சி. பி. சுரேஷ், ஜி. பி. கமல்ராஜ், பன்னீர் செல்வம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இறுதியில் திருவலம் பேரூர் செயலாளர் கே. நேரு நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு.மா.சண்முகசுந்தரம்

**செப்டம்பர் 1 (2018)**



**திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து, கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**கோவை பகுதியில் கழக முன்னோடிகளின் பெயரில் பல்வேறு மன்றம் – படிப்பகங்களை நிறுவிய இவர், இராமநாதபுரம் பகுதியில் ‘கலைஞர் தமிழ் மன்றம்’ தொடங்கி, அதில் திருக்குறள் வகுப்பும், திருக்குறள் மாநாடும் நடத்தி வந்தவர்.**

**ஒன்றுபட்ட கோவை மாவட்ட அவைத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**